# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

பகுதி - I

**குறிப்பு : 1. இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது. 2. விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினவாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும் :-** 15 X 1 = 15

1. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது.

அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

2. சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

அ) புதுமைப்பித்தன் ஆ) ஜெயகாந்தன் இ) தி.சோ. வேணுகோபாலன் ஈ) கண்ணதாசன்

3. முல்லை நிலபறை ............... .

அ) மீன்கோட்பறை ஆ) ஏறுகோட்பறை இ) தொண்டகம் ஈ) துடி

4. "காலின் ஏழடிப் பின் சென்று" - என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி.

அ) விருந்தினரின் காலைத்தொட்டு வணங்கினர்

ஆ) விருந்தினரை ஏழு அடிவரை நடந்து சென்று வழியனுப்பினர்

இ) எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்

ஈ) ஏழுநாள்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்பினர்

5. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் ............. .

அ) திரு. பிரகாசம் ஆ) மார்சல் ஏ. நேசமணி இ) தனிநாயகம் அடிகள் ஈ) முத்துசாமி

6. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

7. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ............ .

அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

8. 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச்சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பியக்காலத்தில் மொழிப்பெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிப்பெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

9. மலர்விழி பாடினாள் - இத்தொடர் ............... .

அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர் மொழி ஈ) அடுக்குத்தொடர்

10. 'அன்றாட வாழ்வில் அறிவியல்' என்ற நூலின் ஆசிரியர் ........... .

அ) ச. தமிழ்ச்செல்வன் ஆ) உதயசங்கர் இ) ஸ்டீபன் ஹாக்கிங் ஈ) நீலமணி

11. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவோடு காக்க என்று .......... வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

***பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.***

*"நனந்தலை உலகம் வளைஇ நேமியோடு*
*வலம்புரி பொறித்த மாதங்கு தடக்கை*
*நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்

அ) முல்லைப்பாட்டு ஆ) மலை படுகடாம் இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

13. நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம் இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

14. பாடலில் இடம் பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்
அ) பெரும் பெயல், பொழிந்த ஆ) பாடு இமிழ், பனிக்கடல்
இ) பாடு இமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை ........
அ) தடக்கை ஆ) வளை இ இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

பகுதி - II பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்கவும். 21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும் :-** 4 X 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) தமிழ் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் தமிழ்த் திரு.இரா. இளங்குமரனார்.
ஆ) முதலாம் இராசராசன் காலம் தொட்டு மெய்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டன.

17. ஜெயகாந்தனின் சிறுகதை தொகுப்பு சிலவற்றை எழுதுக.

18. கரப்பிடும்பை இல்லார் - இத்தொடரின் பொருள் கூறுக.

19. தமிழ்ச்சொல் வளம் குறித்து கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.

20. **பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக்காக்கப்படும் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | உயிரினும் ஓம்பப்படும் |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | நடு ஊருள் நச்சு மரம் பழுத்தற்று |

21. "விடல்" என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு குறுகிய விடையளிக்க :-** 5 X 2 = 10

22. கலைச்சொற்கள் தருக. அ) Belief ஆ) Emblem

23. ஐவகைத் திணைகளின் சிறு பொழுதுகளை எழுதுக.

24. "தணிந்தது" - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25. தொழிற்பெயர்களின் பொருளிற்கேற்பத் தொடர்களை முழுமை செய்க.
அ) பசுமையான ........... ஐக் .............. கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) காட்டு விலங்குகளைச் .......... தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைத் ......... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

26. ஊர் பெயர்களின் மரூஉவை எழுதுக. அ) திருச்சிராப்பள்ளி ஆ) கோயம்புத்தூர்

27. "கொடுப்பதூம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண் டாயினும் இல்" - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

28. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) கண்ணும் கருத்தும் ஆ) கயிறு திரித்தல்

பகுதி - III பிரிவு - I

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க :-** 2 X 3 = 6

29. விருந்தை எதிர்கொள்ளும் தன்மையைக் கூறுக.

30. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணைசெய்கின்றன.
அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?
ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.
இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன?

31. மெய்நிகர் உதவியாளர் குறித்து அறிவன யாவை?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

## பிரிவு - II

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 34-ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும் :-** 2 X 3 = 6

32. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.
33. காற்றே வா என்னும் கவிதையில் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.
34. அடிபிறழாமல் எழுதுக.

"தண்டலை" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். ***(அல்லது)***

"சிறுதாம்பு" என தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல்.

## பிரிவு - III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க :-** 2 X 3 = 6

35. பெரும்பொழுது எத்தனை வகைப்படும்? அவை யாவை?
36. அலகிட்டு வாய்ப்பாடு தருக.

"நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத்தற்று"

37. கொண்டுகூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக்காட்டு ஒன்று தருக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :-** 5 X 5 = 25

38. அ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

*கவிஞன் யானோர் காலக்கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் பகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்!*
*இவை தவறாயின் எதிர்ப்பதென் வேலை!*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை ; அறிக!*

- கண்ணதாசன் ***(அல்லது)***

ஆ) முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலையும் நிகழ்கால வாழ்க்கைச் சூழலையும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) உங்கள் பள்ளியில் நடைபெறும் இலக்கிய மன்ற விழாவிற்கு நிகழ்ச்சி நிரல் ஒன்றினை தயார் செய்க. ***(அல்லது)*** ஆ) உங்கள் ஊருக்கு பாதாள சாக்கடை வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு கூட்டு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

40. அ) காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.





Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

41. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம் நிரப்புக.
கதவு எண் 45, பாரதியார் தெரு, சிதம்பரம் என்ற முகவரியில் வசிக்கும் இராமசாமி மகன் குமரசாமி, காவேரிபாக்கம், அரசு உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு ஆண்டுப் பொதுத்தேர்வு 2022 - 2023 ஆம் ஆண்டில் (பதிவு எண் - 467890) தமிழ் - 85, ஆங்கிலம் - 70, கணிதம் - 82, அறிவியல் - 90, சமூக அறிவியல் - 80 மொத்தம் - 407 பெற்று தமிழ் வழியில் கணினி அறிவியல் சேரவிரும்புகிறார்.

42. அ) நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச்செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக. ***(அல்லது)***

**அ) மொழிப்பெயர்க்க.**

*Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughtout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide, Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.*

**குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு மொழி பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்தனையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்தனையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழிகளிலும் நூலிலும் இலையைக் குறிக்க leaf (லீஃப்) என்னும் ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளிலும் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித்தாள், இலை, தோகை, ஓலை எனப்பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது. அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

i) ஒரு மொழியும் அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும்?
ii) தமிழ் மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர்?
iii) தமிழ்நாட்டின் பொருள் வளத்தினை எவ்விதம் விளங்கிக் கொள்ளலாம்?
iv) மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக?
v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க :-** 3 X 8 = 24

43. அ) சங்க இலக்கியத்தில் கூறும் தமிழரின் கொடைத்திறன் பற்றிய கருத்துகளை எழுதுக. ***(அல்லது)***
ஆ) உங்களைக் கவர்ந்த ஆசிரியர் அல்லது அரசியல் தலைவர், தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைத் தானே சொல்வதைப்போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றினை எழுதுக. ***(அல்லது)***
ஆ) "அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. **அ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.**
முன்னுரை - சுற்றுச்சூழல் பாதுகாப்பு - நிலம் மாடுபடுதல் - நீர் மாசுபடுதல் - காற்று மாசுபடுதல் - கட்டுப்படுத்தும் வழிகள் - இயற்கையைப் பாதுகாத்தல் - முடிவுரை. ***(அல்லது)***
**ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**
முன்னுரை - தமிழர் பண்பாட்டில் விருந்து - தமிழர் உணவு முறை - விருந்தோம்பல் தமிழர் பண்பாட்டின் மகுடம் - முடிவுரை.



-E.VIKRAM (M.Sc.,B.Ed(Mathematics))
Now I am Working in Orange International Matriculation Hr. Sec. School., Aagaram Village ,Vinnamangalam Post , Aagaram Village , Vinnamangalam Post , Arni -632316.,Tiruvannamalai district.
& Sri Rajalakshmi Tuition Centre.,Arni -632301.,Tiruvannamalai district.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com